
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1085

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

40

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# சமூகநீதிப் பாதைக்கு, தமிழ்நாடு துணை நிற்கும்!

மருத்துவப் படிப்புகளில் அனைத்திந்திய தொகுப்புக்கு மாநிலங்கள் வழங்கும் இடங்களில், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவிகித இடஒதுக்கீடு அளிக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு, மிக முக்கியமான, முன்னுதாரணமான தீர்ப்பாகும். சமூகநீதியின்பால் பற்றுகொண்ட கழகம் காட்டிய உறுதி, தமிழ்நாட்டுக்குக் கிடைத்த வெற்றி எனத் தீர்ப்பை வரவேற்று, மிக விரிவான அறிக்கை வெளியிட்டார் நம் முதலமைச்சர் அவர்கள். “மண்டல் குழுப் பரிந்துரைகள் நடைமுறைக்கு வருவதற்குத் தமிழ்நாடு ஆற்றிய பங்களிப்புக்கு ஈடானது இந்த வெற்றி” என்று பாராட்டியதுடன் ‘சமூகநீதி வரலாற்றில் முக்கியமான மைல்கல்!’ என்ற அவரது அறிக்கை, அந்த இட ஒதுக்கீடு சட்டப் போராட்டத்தின் நீண்ட வரலாற்றை விளக்கியது.

கடந்த பல ஆண்டுக்காலமாக திராவிட முன்னேற்றக் கழகம், அரசியல் களத்திலும் நீதிமன்றங்களிலும் நடத்திய இடைவிடாத போராட்டத்தின் விளைவாக, முதல்முறையாக அகில இந்திய தொகுப்பு இடங்களில் ஓ.பி.சி. இடஒதுக்கீடு 2022-ஆம் அண்டு முதல் நடைமுறைக்கு வந்தது. இதன் மூலம், இந்தியா முழுவதும் உள்ள பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த 4,000 மாணவர்கள், ஒவ்வோர் ஆண்டும் இதன்மூலம் தங்களுடைய உரிமையை, பலனைப் பெறத் தொடங்கியுள்ளனர்.

நாடு முழுவதும் உள்ள கோடானுகோடி பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனுக்காக, உச்ச நீதிமன்ற வழக்கில் தன்னையும் இணைத்துக் கொண்டு, வாதிட்டு வென்றது தி.மு.க. இது தொடர்பான வழக்குகளில், இட ஒதுக்கீடு தொடர்பாக பல முன்வரலாறுகள் இருந்தாலும், 2019-ஆம் ஆண்டில் இந்த அநீதி குறித்து நாடாளுமன்றத்தில் குரலெழுப்பத் தொடங்கியதில் இருந்து இதைத் தீவிரப் பிரச்சினையாக கருத்தில் கொண்டு, தொடர்ச்சியாகப் பணியாற்றியது கழகம்.

### நாடாளுமன்ற வாதங்கள்

2019-ஆம் ஆண்டு மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்ட மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் அவர்கள், நாடாளுமன்றத்தில் தனது முதல் உரையிலேயே இந்த அநீதியை எதிர்த்து குரல் கொடுத்தார். “தமிழ்நாட்டில் 69 சதவிகித இட ஒதுக்கீடு நடைமுறையில் உள்ளது. இதில் பி.சி., எம்.பி.சி. என ஓ.பி.சி. மக்களுக்கான இட ஒதுக்கீடு 50 சதவிகிதமாகும். ஒன்றிய அரசின் கீழ் இயங்கும் மருத்துவக் கல்லூரிகள், ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்கள் 2006-ஆம் ஆண்டின் இட ஒதுக்கீடு சட்டத்தினைப் பின்பற்றுகின்றன. இந்த சட்டத்தின்படி, ஓ.பி.சி. வகுப்பினருக்கு 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. ஆனால், அனைத்திந்திய தொகுப்பிற்கு மாநிலங்கள் விட்டுத்தரும் இளநிலை, முதுநிலை மருத்துவ இடங்களை நிரப்புவதில் மட்டும் இந்த இட ஒதுக்கீடு பின்பற்றப்படுவதில்லை. ஒன்றிய அரசு ஏற்றுக்கொண்ட இட ஒதுக்கீடு சட்டத்தை,ஒன்றிய அரசே கடைப்பிடிப்பதில்லை. இதனால், ஓ.பி.சி. மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது. அனைத்திந்திய தொகுப்பிற்கு விட்டுக்கொடுத்த இடங்களில், ஓ.பி.சி. இட ஒதுக்கீடு இல்லையென்பதால், மாநிலங்கள் அந்த மாணவர்களுக்கு அநீதி இழைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன எனத் தர்க்கபூர்வமாக வாதத்தை முன்வைத்தார்.


நமது கோரிக்கையின் நியாயத்தை, ஒன்றிய அரசு உணர மறுத்தது. ஒன்றிய அரசு முனைப்பு காட்டி இருந்தால், அந்த ஆண்டே அனைத்திந்திய தொகுப்பில், ஓ.பி.சி. இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தி இருக்க முடியும். ஆனால், உயர்சாதியினருக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு அளித்து, இட ஒதுக்கீட்டு முறையையே கேலிக்கூத்தாக்கிய ஒன்றிய ஆட்சியாளர்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு எனில், துரோகம் செய்வதற்கே விரும்பினர்.



ஓவியம் : ரவி பேலட்

### வெள்ளை அறிக்கை வெளியிடுக!

ஆனால், சட்டப்போராட்டத்தைத் தொடங்குவதற்கு முன், பி.வில்சன் அவர்கள், ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சருக்குக் கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில், மிக விரிவாக , ஒன்றியத் தொகுப்பின் வரலாறு, இட ஒதுக்கீட்டின் சட்ட வாதங்கள், சட்ட பூர்வ உரிமைகள், இந்திய மருத்துவக் கவுன்சில் வழிகாட்டுதல்கள் என எல்லாவற்றையும் சுட்டிக்காட்டி இருந்தார். ஆனால், அங்கும் இந்த சிக்கல் தீர்க்கப்படவில்லை. ஒன்றிய அரசுக்கு இது தொடர்பான புரிதலை உருவாக்க வேண்டும் அல்லது புரிந்தும் புரியாமல் இருப்பவர்களை எழுப்ப வேண்டும் என்கிற முயற்சி பலன் அளிக்கவில்லை. 01.11.2019 அன்று அமைச்சகத்துக்குக் கடிதம் அளித்தும், நேரில் விளக்கிய பின்பும் நடவடிக்கை எடுக்காத நிலையில், 21.11.2019 அன்று, இதுகுறித்து விவாதிக்க வேண்டும் எனக் கழகத்தின் சார்பில் ஒத்திவைப்பு தீர்மானத்துக்கு நோட்டீஸ் அளித்தனர் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள். 22.11.2019 அன்று கழகத்தின் தலைவர் வெளியிட்ட மிக முக்கியமான அறிக்கையொன்று, இந்த விவகாரத்தில், பிரதமர் மோடி வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என அழுத்தமாக வலியுறுத்தியது.



M.K.Stalin
@mkstalin

திமுக-வின் சமூகநீதிப் போராட்டத்தில் மேலுமொரு வெற்றியாக மருத்துவ சேர்க்கையில் OBC மாணவர்களுக்கு 27% இடஒதுக்கீட்டை அளிக்கத் தயார் என மத்திய அரசு உயர்நீதிமன்றத்தில் தெரிவித்திருக்கிறது.

இது முதல்கட்ட வெற்றி. 69% அடிப்படையில் OBCக்கு 50% #Reservation பெற தொடர்ந்து போராடுவோம்!

நாடு முழுவதும் உள்ள ஓ.பி.சி. மாணவர்கள் சந்திக்கும் மிக முக்கியமான விவகாரத்தில், தொடர்ச்சியாக கோரிக்கை வைத்தும் ஒன்றிய அரசு நிறைவேற்றவில்லை. மாநிலங்களவையில் விவாதத்துக்குக் கொண்டு வந்தும் நடைபெறவில்லை. அதைத் தொடர்ந்து ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சகத்துக்கு விளக்கம் அளித்தும் நடக்கவில்லை. ஒன்றிய அரசின் உயர்சாதி பற்றும், பாசமும் ஓ.பி.சி. மாணவர்கள் விவகாரத்தில் நேர் எதிராக இருந்தன.

அனைத்திந்திய தொகுப்பிற்கு மாநிலங்கள் தரும் மருத்துவக் கல்வி இடங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு உரிய இடஒதுக்கீடு பின்பற்றப்படாததால், 2007-ஆம் ஆண்டு முதல் 2021-ஆம் ஆண்டு வரை சுமார் 44,000 இடங்களுக்கும் மேலாக ஓ.பி.சி. மாணவர்கள் இழந்துள்ளனர். அனைத்திந்திய தொகுப்பில் ஓ.பி.சி. இடஒதுக்கீடு செயல்படுத்தப்பட்டிருந்தால், சுமார் 44,000 மருத்துவர்கள் உருவாகியிருப்பார்கள். இப்படி கண்ணெதிரே மிகப் பெரிய துரோகம் இழைக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

> “இந்தியா சமூகநீதிப் பாதையில் தொடர்ந்து நடைபோட, தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழும். திராவிட முன்னேற்றக் கழகம் அதற்கு என்றும் போராடும்” என முதலமைச்சர் வெளியிட்ட அறிக்கை சொல் அல்ல, செயல்.

“சமூகநீதி என்பது நெடும் பயணம், தொடர் ஓட்டம். வாய்ப்பு மறுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள், எல்லா தளங்களிலும் தங்கள் பங்கைப் பெற்று சமூக மக்களாட்சியை நிலை நிறுத்தும் வரையிலும், நமது பணியையும் போராட்டத்தையும் சமரசமின்றித் தொடர உறுதி ஏற்போம். இந்தியா சமூகநீதிப் பாதையில் தொடர்ந்து நடைபோட, தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழும். திராவிட முன்னேற்றக் கழகம் அதற்கு என்றும் போராடும்” என முதலமைச்சர் நம் திராவிட மாடல் நாயகரின் அன்று வெளியிட்ட அறிக்கை சொல் அல்ல, செயல் என்பதை இந்த சட்டப்போராட்டத்திலும் பார்க்கலாம்.

...தொடரும்

## மோடி அரசின் புதிய உருட்டு!

‘ஓசூரில் விமான நிலையம் அமைக்க வேண்டும்’ என்ற தமிழ்நாட்டின் கோரிக்கையை மீண்டும் நிராகரித்துள்ளது ஒன்றிய அரசு. இதுதொடர்பாகப் பதிவிட்டுள்ள அகிலன் கார்த்திகேயன் என்பவர், “பெங்களூரு விமான நிலையத்தில் இருந்து 150 கி.மீ.க்குள் இருப்பதால், ஓசூர் விமான நிலையத்துக்கு அனுமதி இல்லையாம்.

பா.ஜ.க. ஆளும் உத்தரப்பிரதேச மாநிலம் நொய்டாவில் புதிய விமான நிலையம் கட்டப்பட்டு வருகிறது. இது பா.ஜ.க. ஆளும் டெல்லியின் விமான நிலையத்தில் இருந்து வெறும் 72 கி.மீ. தொலைவுதான். தமிழ்நாடு சார்பில், இந்த வாதம் ஏற்கெனவே முன்வைக்கப்பட்டது. ஆனால், இப்போது, ஓசூர் விமான நிலையத்தை நிராகரிக்க, புதிய காரணத்தைக் கொண்டு வந்துள்ளது ஒன்றிய அரசு. ஒன்றிய சிவில் விமான போக்குவரத்துத்துறை இதை நிராகரிக்கவில்லை, நிராகரித்திருப்பது, ஒன்றிய பாதுகாப்புத் துறை.

காரணம் என்ன தெரியுமா?

பெங்களூருவில் உள்ள ஹெச்.ஏ.எல். (Hindustan Aeronautics Limited) நிறுவனம் ஓசூர் வான்பரப்பைப் பயன்படுத்தி வருகிறதாம். அந்நிறுவனம் ஒன்றிய அரசின் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்குவதால், ஓசூர் விமான நிலையத்துக்குப் பாதுகாப்புத் துறை அனுமதி மறுத்துள்ளது. பாதுகாப்புத் துறை அனுமதியை வழங்கினால்தான், சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அனுமதிக்கலாமா வேண்டாமா என்பதைப் பரிசீலிக்குமாம்.

பெங்களூருவில் இப்போதிருக்கும் கெம்பேகவுடா விமான நிலையம் போதவில்லை, இன்னொரு விமான நிலையம் அமைக்க வேண்டும் என்று அம்மாநில அரசு முயன்று வருகிறது. இந்த விமான நிலையத்துக்கு பெங்களூருவிலிருந்து 150 கி.மீ. தொலைவில், ஹெச்.ஏ.எல். வான்பரப்பின் எல்லைக்கு வெளியே ‘பெங்களூருவிலேயே’ இடம் கிடைக்கிறதா என்று பொறுத்திருந்து பார்ப்போம்!” எனப் பதிவிட்டுள்ளார்.

ஓசூர் விமான நிலையத்திற்கு அனுமதி மறுத்த வேகத்தில் தமிழ்நாட்டுக்குப் பிரச்சாரத்துக்குப் புறப்படவும் தயாராக இருக்கிறார் மோடி. நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு, 6 முறை தமிழ்நாட்டுக்கு வந்தவருக்கு, மீண்டும் சட்டமன்றத் தேர்தலின்போதுதான் நேரம் கிடைத்திருக்கிறது என்பதையும் மறந்துவிடக் கூடாது!

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரிடம் திருமண நாள் வாழ்த்து!



எம்.பி.தாமோதரன்

2015-ஆம் ஆண்டு எனது 15-வது திருமண நாளை முன்னிட்டு, அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை என் மனைவி, மகன், மகள் ஆகியோருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன், மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., அன்றைய மாதவரம் வடக்குப் பகுதிச் செயலாளர் அண்ணன் வழக்கறிஞர் என்.பரந்தாமன் ஆகியோரும் உடனிருந்தனர். அந்த நாள் என் வாழ்நாளில், மறக்க முடியாத இனிய நாளாக அமைந்தது.

**- எம்.பி.தாமோதரன்,**
**வடபெரும்பாக்கம், முன்னாள் மாவட்டத் துணை அமைப்பாளர், கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, சென்னை வடகிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### அரிசி சாப்பிடும் மக்களுக்கும் முக்கியத்துவம்!

1958-ஆம் ஆண்டு, நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய கழக உறுப்பினர்கள் ஈ.வெ.கி.சம்பத், இரா.தர்மலிங்கம் இருவரும் 16 திருத்தங்களை முன்வைத்தனர். ‘வெளிநாடுகளில் உணவுப்பொருள் இறக்குமதி செய்யும் வகையில், கோதுமை சாப்பிடும் மக்களைப் போல அரிசி சாப்பிடும் மக்களையும் நடத்த வேண்டும். வடநாட்டுக்கு இணையாகத் தென்னாட்டையும் தொழில்மயமாக்கத் தேவையான நடவடிக்கைகளை, ஒன்றிய அரசு எடுக்கத் தவறுகிறது’ என அவர்களது கோரிக்கைகள் அப்போது பரபரப்பாகப் பேசப்பட்டன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131